## In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 145/2023 தேதி- 16.02.2026
(P.W.1) - அருமைராஜ்

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழிப்பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் சொத்தான நீசர்வே எண்.564/10 மற்றும் 11-ல் உள்ள உரிமையை ஒப்புக்கொண்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் வழிப்பாதை உள்ளதாக அரசு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கில் சொல்லப்பட்டுள்ள முகவரியான செங்கல்பட்டு மாவட்டத்தில் தான் தற்போது வசித்துவருகிறேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதபடிக்க தெரியுமா என்றால் தமிழ் நன்றாக தெரியும். ஆங்கிலம் தெரியாது. இந்த வழக்கின் விவரங்கள் என் தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள பிராதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ-6 ஆவணத்தை பார்த்துள்ளேன் என்றால் இல்லை. என் தரப்பில் தாக்கல் செய்யபடவில்லை. மேற்சொன்ன வா.சா.ஆ-6 ஆவணத்தை எனக்கு தெரியாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-6 ஆவணம் ஒரு பொய்யான ஆவணம் என்றால் சரிதான். வழிப்பாதை சொல்லப்படாமல் தாக்கல்செய்யப்பட்டுள்ள்து. வழக்கு பட்டிகை சொத்து வீட்டுமனையா அல்லது விவசாய நிலமா என்றால் வீட்டு மனை ஆகும். அதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது என்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தில் கட்டிடம் ஏதும் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை தொட்டு உ ள்ள பகுதிகளில் வாழைமரங்கள் நடப்ப்ட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீடும் உள்ளது.

2. வழக்கு பட்டிகை சொத்தை வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்சொன்ன வழக்குபட்டிகை சொத்திற்கான வில்லங்க சான்றிதழை இந்தவழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமான வில்லங்கசான்றிதழ் நகல் றீசர்வே 564/11 -க்கான வில்லங்கசான்றிதழ் என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லங்க சான்றிதழ் பி.வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1975 முதல் 2024 வரையான வில்லங்கச்சான்றிதல் என்றால் சரிதான். மேற்சொன்ன பி.வா.சா.ஆ-.1 ஆவணத்தில் றீசர்வே 564/11 விவசாய நிலம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. றீசர்வே எண் 564/11 வீட்டுமனை என்று நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அது விவசாய நிலம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கின் கோரியுள்ளவாறு நீளம் மற்றும் அகலம் கொண்ட எவ்வித வழிப்பாதையும் இல்லை என்றால் சரியல்ல. ஆணையர் நியமனம் செய்யப்பட்டாலும் பிராதில் சொல்லியுள்ளவாறு வழிப்பாதை ஏதும் இல்லை என்று உண்மை தெரியவரும் என்பதால் நியமன மனுதாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆணையரின் நியமன மனுதாக்கல் செய்யவேண்டும் என்று தெரியாது.

3. 1-ஆம் பிரதிவாதி என் சகோதரி என்றால் சரிதான். அவரின் கணவர் வழக்குபட்டிகை சொத்தை விலைக்கு வாங்கிய போது மச்சினன் என்ற முறையில் நானும் உதவி செய்தேன் என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவர் பெயரிலுள்ள ஆவணம் பற்றி தெரியாது என்றால் சரிதான். நான் விலைக்கு வாங்கும் போது பிரதிவாதியின் கணவர் பெயரிலுள்ள ஆவணத்தை படித்துபார்க்கவில்லை என்றால் அதற்கான அவசியம் இல்லை. பிரதிவாதியின் கணவர் பெயரிலுள்ள ஆவணத்தில் வழிப்பாதை பற்றி எந்தகுறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை விலைக்கு வாங்கும்போது வழிப்பாதைக்காக தொகை ஏதும் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. 15 அடி வழிப்பாதை இருப்பதாகவும் அதற்கான தொகையை செலுத்தியுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ-2 ஆவணத்தின்

மூலம் வழிப்பாதைக்கு தொகை செலுத்திய விவரம் ஏதும் துலங்காது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 564/10 மற்றும் 11 ஆவணத்தின் மூலம் ஒரே கண்டமாக உள்ளது என்றால் இல்லை. இடையே காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது. வா.சா.ஆ-7 ஆவணம் என்தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எனது ஆவணம் ஏற்படுத்தும்போது அதில் இணைக்கப்பட்டுள்ள உத்தேச வரைபடம் தயார் செய்த நபர்தான் வா.சா.ஆ-7 ஆவணத்தை தயார் செய்த ஐயப்பன் என்றால் சரிதான். வா.சா.ஆ-2-இல் உள்ள உத்தேச வரைபடமும் வா.சா.ஆ-7 வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள வழிப்பாதை துலங்காது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ-7 ஆவணம் வழக்கிற்காக என்தரப்பில் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-7 ஆவணம் தனிநபர் ஆவணம் என்றால் சரியல்ல. ஐயப்பனும், 1-ஆம் பிரதிவாதியும் உடனிருந்தார்கள். வா.சா.ஆ-7 ஆவணம் எவ்விதத்திலும் பிரதிவாதிக்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-7 ஆவணத்தில் பிளாட்டாக பிரிக்கப்பட்டு ள்ளதற்கும் பிரதிவாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு பிளாட் பிரிக்கப்பட்டால் முன்அனுமதி பெறப்பட வேண்டுமென்றாலும் அவ்வாறு முன் அனுமதி பெற்றதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி பட்டிகை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள வழிப்பாதை முழுக்க முழுக்க கற்பனையாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே வேறு வழிப்பாதை உள்ளது என்றாலும் அதை மறைக்க நீதிமன்ற ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் அமைத்து இருந்தார் என்றாலும் அதை இடித்தற்காக தக்கலை காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும். 2023-ஆம் வருடத்திலிருந்தே வழக்கு பட்டிகை சொத்திலுள்ள காம்பவுண்ட் சுவரை இடிக்க பலமுறை முயற்சி செய்தேன் என்றாலும் மேற்சொன்ன வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.